# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@sltnet.lk


**PRESS RELEASE**

பெப்ரவரி 1 2013

**ஜப்பான் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மீள்திரும்பியோருக்கு ரூ. 90 மில்லியன் ஐ வாழ்வாதார திட்டங்களுக்காக வழங்குகிறது**

ஜப்பானிய அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக US$ 723,568 ஐ (அண்ணளவாக ரூ.90 மில்லியன்) இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மீள்திரும்பியோருக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் வழங்குகிறது. ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனமான JEN நிறுவனத்தினால் அமுலாக்கப்படும் இத்திட்டத்திற்கான நிதி ஜப்பானிய அரசாங்கத்தின் ஜப்பான்-NGO கூட்டுறவு நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

“இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மீள்திரும்பியோருக்கான வாழ்வாதார உதவித்திட்டம்” என்ற பெயரில் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் நிதியானது விவசாய கிணறுகளை கட்டுவதற்கும், விவசாயத்திற்கு தேவையான உபகரணங்கள், விதைகள், செடிகளை வழங்குவதற்கும் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடாத்துவதற்கும் பயன்படுத்தப்படும். இச்செயற்திட்டத்தின் மூலம் 350 குடும்பங்கள நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனடைவர்.

உலக சமாதானத்துக்கும் செழுமைக்கும் அர்ப்பணிப்புடன் பங்களிப்பு செய்யும் நாடு என்ற வகையில், ஜப்பான் அதன் உதவிகளின் மூலம் இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்துதல, மீள்கட்டுமானங்களை மேற்கொள்ளல் மற்றும் நடுத்ததர, நீண்ட கால அபிவிருத்தியை ஏற்படுத்துதல் துதல் என்பனவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இந்நோக்கின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள் கட்டுமாணங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் ஜப்பான் முன்னுரிமையளித்துள்ளது. இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பன நிலையான அபிவிருத்திக்கும் செலுமைக்கும் அடிப்படையாக இருப்பதால் ஜப்பான் ஆனது சமாதான முன்னெடுப்புக்களுக்கும் தனது பூரண ஆதரவையும் நல்கியுள்ளது.

“1994 ல் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகிய JEN ஆனது உலகளாவிய ரீதியில் மோதல்களாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகளையும் சுயசார்புக்கான ஆதரவினையும் வழங்கி வருகிறது. இலங்கையில் 2004 சுனாமி அனர்த்தத்திற்கு பின் தனது செயற்பாடுகளை ஆரம்பித்த JEN நிறுவனம் அதன் பூர்த்தியின் பின் கிழக்கில் 2007 ல் இருந்தும் வடக்கில் 2009 ல் இருந்தும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்தி வருகிறது.

2013 1ம் திகதி முதல் JEN ஆனது “இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மீள்திரும்பியோருக்கான வாழ்வாதார உதவித்திட்டம்” என்ற புதிய ஓராண்டுத்திட்டத்தை ஆரம்பிக்கிறது,” என்று JEN நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி அலுவளர் செல்வி வடனாபே குறிப்பிட்டார்.

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் JEN நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி அலுவளர் செல்வி வடனாபே ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதுவர் இல்லத்தில 2013 பெப்ரவரி 1ம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது.

**********************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831-3 (Ext.225)